மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், ஓட்டப்பிடாரம்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII,Cr.P.C)

| | | |
|---|---|---|
| வழக்கு எண். | : | STC 285/2024 |
| பெயர் | : | பரமசிவன் (PW2/LW2) |
| த/பெ. | : | ஆறுமுகம் |
| வயது | : | 43 |
| கிராமம் | : | புதியம்புத்தூர் |
| தாலுகா | : | ஓட்டப்பிடாரம் |
| Calling | : | பழ வியாபாரி |

(Accused Vanniyaraj is present.)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 6 th day of March 2026.

<u>முதல் விசாரணை</u>

1)நான் புதியம்புத்தூரில் குடியிருந்து கொய்யாப்பழம் வியாபாரம் செய்து வருகிறேன். அ.சா.1 ஐ தெரியும் அவர் என் அண்ணன் மகன். கடந்த 07.06.2023 ஆம் தேதி மதியம் 3.20 மணியளவில் நான் தூத்துக்குடி ரோட்டில் இருந்து ஓட்டப்பிடாரம் செல்லும் வழியில் புதியம்புத்தூர் ஜங்சனில் கிழக்கில் இருந்து வடக்காக எனது இரு சக்கர வாகனமான TN 69 BX 8600 செல்லும் போது எதிர்புறமாக வந்த இரு சக்கர வாகனம் எனது வண்டியின் மீது மோதிவிட்டது.நான் மயக்கம் ஆகிவிட்டேன். மயக்கம் தெளிந்தபிறகு நான் திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் இருந்தேன்.இந்த விபத்தில் எனக்கு காலில் காயம் ஏற்பட்டது.(சாட்சியின் வலது காலை நீதிமன்றத்தில் மேற்படி சாட்சி காட்டியபோது மேற்படி வலது காலில் விரல்கள் எதுவும் இல்லாமல் இருந்தது.)விபத்திற்கு காரணம் அத்திமரப்பட்டியை சேர்ந்த கனி என்று சொன்னார்கள்.அவரை இது வரை நான் பார்க்கவில்லை.போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1)சம்பவத்தன்று நான் ஆறுமுகம் என்பவரின் இறுதி சடங்கிற்காக சென்றேன். அவர் உறவு முறை தெரியாது ஆனால் உறவினர் ஆவார். மேலமடம் ஜங்சன் மாலை பொழுது அதிக போக்குவரத்து இருக்கும் என்றால் சரிதான். நான் கிழக்கில் இருந்து வடக்கு நோக்கி திரும்பினேன் என்று சொன்னால் சரிதான். வடக்கில் இருந்து தெற்குநோக்கி வரும் வாகனங்கள் திரும்பும்போது தெரியாது. நான் வேகமாக வந்து திரும்பியதால் விபத்து ஏற்பட்டது என்றால்

சரியல்ல. நான் மெதுவாக தான் சென்றேன். என் மீது மோதிய வாகனம் தான் வேகமாக வந்தது. எதிரே வாகனம் தான் வேகமாக வந்து மோதியது. இந்த விபத்தில் இன்னொரு வாகனம் ஈடுபட்டது தெரியுமா என்றால் தெரியாது.

2)என் மீது எந்த வாகனம் விபத்து ஏற்படுத்தியது என்று தெரியாது என்றால் இரு சக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது என்று மட்டும் தெரியும். என் மீது மோதிய வாகனத்தையோ, எதிரியையோ நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். என்னை 108 ஆம்புலன்சில் அழைத்து சென்றது யார் என்று எனக்கு தெரியாது. திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு எனது உறவினர்கள் தான் அழைத்து சென்றார்கள். இந்த விபத்தில் இன்னொரு வாகனம் ஈடுபட்டது என்றும் மேற்படி இன்னொரு வாகனம் என் மீது மோதிவிட்டு நிற்காமல் சென்றுவிட்டது என்றால் தெரியாது.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒப்பம்/– திரு.S.பாக்கியராஜ்
மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர்,
ஓட்டப்பிடாரம்.